மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | OS 115/22 |
| பெயர் | : | மணி (PW1) |
| த/பெ. | : | சுப்பன் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26 th day of March 2025.

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எனது தாத்தா பெயர் சண்முகம் என்றால் சரிதான்.தாவா சொத்து சர்வே எண் 63/77 A ல் விஸ்திரணம் ஒரு ஏக்கர் 82 செண்ட் என்று பிராதில் சொல்லியுள்ளேன்.மேற்படி சொத்து என் தாத்தா சண்முகத்திற்கு பாத்தியப்பட்டது.சண்முகத்திற்கு சுப்பன் மற்றும் காளிமுத்து என்று இரண்டு ஆண் மகன்கள்.சண்முகம் 1957 ல் இறந்தார்.சண்முகம் காலமான பிறகு மேற்படி சொத்தினை அவரது மகன்கள் வாய்மொழியாக சமமாக பாகம் செய்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.என் தகப்பனார் பெயர் சுப்பன்.

2)என் தந்தை இளையவர் , காளிமுத்து மூத்தவர்.என் தந்தை இறந்தபிறகு அவருக்கு பாத்தியப்பட்டிருந்த சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்றாலும் காளிமுத்துவிற்கு பாத்தியப்பட்ட சொத்து 1 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும் அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.ஒரு ஏக்கர் 82 செண்ட்டில் தென்பக்கம் மூக்கன் என்ற பெரிய நாராயணனுக்கு பாத்தியப்பட்டிருந்தது.வடபக்கம் சூசை என்ற சின்ன நாராயணனுக்கு பாத்தியப்பட்டிருந்தது அவ்வாறு தான் பட்டாவில் உள்ளது.

3)எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட பாகத்தில் கிடைத்த சொத்தினை நான் என் மனைவிக்கு 08.04.2015 ல் ஒரு ஆவணம் ஏற்படுத்தினேன் என்றால் சரிதான் அது கிரைய ஆவணம்.03.06.2006 ல் 1 ஆம் பிரதிவாதி அவரது மக்களுக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்ததன் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளது என்றால் சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி மற்றொரு நாளுக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.